1992 ஏப்ரல் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 453, திரு. கு. லாரன்ஸ். மாண்புமிகு மீனளத் துறை அமைச்சர்.

453—

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடற்கரை கிராமங்களில் வாழும் மக்களுக்கு வீட்டுவசதி.

*1960 திரு. கு. லாரன்ஸ் :

மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடற்கரை கிராமங்களில் வாழும் மக்களின் வீடுகள் இயற்கையின் சீற்றத்தினால் இடிந்து விழுவதைத் தடுக்க அம்மக்களுக்கு அரசு உறுதியான வீடு கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் கடற்கரைப் பகுதிகளில் அடிக்கடி கடலின் சீற்றத்தினால் நிலமற்ற ஏழைகள் தாங்கள் சுயமாகக் கட்டிய வீடுகளை இழந்து துன்பப்படுகின்ற சூழ்நிலை இருக்கிறது. தமிழகத்திலே இந்தக் கடற்கரைப் பகுதி என்பது அரபிக்கடலைத் தாங்கியிருக்கிற பகுதி. அரபிக் கடல் சற்றுச் சீற்றமான கடல் அலைகளைக் கொண்டிருக்கிற பகுதி. எனவே, அந்த நிலமற்ற, வீடற்ற ஏழைகள் அடிக்கடி பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு ஒரு நிரந்தரமான திட்டத்தை வகுக்கிற முயற்சியை இந்த அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இயற்கையின் சீற்றத்தை எதிர்த்துப் போராடும் மீனவர்களின் துயரை நீக்கும்பொருட்டு நமது ஒப்பற்ற முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 1991-92-ல் 2,100 வீடுகளை கடற்கரை மாவட்டங்களில் உள்ள மீனவர்களுக்குக் கட்டித்தர உத்தரவிட்டுள்ளார்கள். அதன் அடிப்படையிலே கன்னியாகுமரி மாவட்டத்துக்கு மட்டும் 699 வீடுகள் கட்டித்தர உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலமற்ற ஏழை மீனவர்களுக்கு 699 வீடுகளைக் கட்டித்தர மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருப்பதற்காக நான் என்னுடைய பணிவான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆறு மாதங்களுக்கு முன்னால் இந்த கடற்கரைப் பகுதி கிராமங்களிலே கடல் சீற்றத்தினால் நூற்றுக்கணக்கானவர்களுடைய வீடுகள் இடிந்துவிட்டன. எனவே, அந்த மக்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் முன்னுரிமை இந்தத் திட்டத்தில் அறிவிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடு ஒன்றுக்கு தற்போது ரூபாய் 17,000 ஒதுக்கப்பட்டு வருகின்றது, இதை மேலும் அதிகப்படுத்தலாமா என்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது. வருகின்ற நிதி ஆண்டிலே மீனவர்களுக்கு வீட்டு மனைகள் அளிக்கும் பட்சத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 454, டாக்டர் (திருமதி) வெ. சரோஜா. மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

454—

சங்ககிரியில் சுண்ணாம்புக்கல் தூள் செய்யும் தொழிற்சாலை

*4186 டாக்டர் (திருமதி) வெ. சரோஜா :

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சங்ககிரியில் சுண்ணாம்புக்கல் தூள் செய்யும் தொழிற்சாலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில். அத்தொழிற்சாலை எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

(அ) இல்லை,

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை,